1969 செப்டம்பர் 12]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) சென்னையிலும், தூத்துக்குடியிலும் முறையே ரூ. 388.50 லட்சம், ரூ. 208 லட்சம் செலவில் மீன் பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, சென்னையிலேயும், தூத்துக்குடியிலேயும் மீன்பிடி துறைமுகங்களைக் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த இரண்டு இடங்களிலும் மீன்பிடி துறைமுகங்கள் எப்போது கட்டிமுடிக்கப்படும்? அதன்மூலம் எவ்வளவு மீன்கள் பிடிக்கப்படும்? அதன்காரணமாக எவ்வளவு அன்னியச் செலாவணி நமக்குக் கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த இரண்டு இடங்களிலும் வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு மீன் பிடிக்கப்படும், இதனால் எவ்வளவு அந்நியச் செலாவணி கிடைக்கும் என்ற விவரம் இல்லை. எந்த வகையிலே கட்டப்படும், எத்தனை இயந்திரப் படகுகள், மீன் இழுப்புப் படகுகள் ஏற்படுத்தப்படும் என்ற விவரங்கள்தான் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்கள் சொல்லலாம்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தப்படுகின்ற இடத்திலே மீன்பிடி படகுகள், கேனோ படகுகள் இவற்றைக் கட்டுகின்ற இடம் இருப்பதால் அங்கேயுள்ள மீனவர்களுக்கு இடம் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, அதற்குப் பதிலாக வேறு இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தப் பிரச்சினை இப்பொழுது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. டி. மார்டின் : இந்த இரண்டு மீன்பிடி துறைமுகங்களைத் தமிழகத்திலே ஏற்படுத்துவதுபோன்று, பெரியதாழை, மணப்பாடு, உவரி, ஆலந்தலை போன்ற இடங்களிலே உள்ள மீனவர்கள் மீன் பிடித் துறைமுகம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமை இருப்பதால் அங்கேயும் சிறு மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தூத்துக்குடி, சென்னையில்தான் இப்பொழுது அமைக்கப்படுகிறது. இராமேஸ்வரத்திலே மேலும் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப் படுகிறது.

Tourist Traffic Advisory Committee

* 242 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to place on the table of the House, copy of the decisions arrived at by the Tourist Traffic Advisory Committee in its meeting held in the Nilgiris early in 1968?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முடிவுகளின் நகல்* பேரவையில் வைக்கப்படுகிறது.

காவிரிப்பூம்பட்டினம்

* 243 வினு—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் காவிரிப்பூம்பட்டினத்தை யாத்ரீகர் ஸ்தலமாக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது சுற்றுலாத் துறையில் இல்லே.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இன்றைய தமிழக அரசு பண்டையக் காவிரிப்பூம்பட்டினத்துச் சிறப்புகளை நினைவுபடுத்துகின்ற வகையில் பல நல்ல காரியங்களை மேற்கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டி அதையொட்டி அந்த இடத்தை யாத்ரிகர் ஸ்தலமாக ஆக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான், அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லையென்று சொன்னேன். அதனுல் பிறகு எடுத்துக்கொள்ளப்படலாம்.

Soil Testing Laboratory at Salem

* 244 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state

(*a*) Whether the Government has decided to set up a soil testing laboratory at Salem this year; and

(*b*) What will be its work and activities?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இது அரசின் ஆலோசனையில் உள்ளது.

(இ) மண்வளச் சோதனை ஆய்வுக் கூடம் அமைக்கப்படின், அதன் அலுவல்கள் வருமாறு—

(1) உழவர்களின் நிலங்கள் எந்த அளவுக்கு வளம் செறிந்தது என்பதைக் கண்டறிதல்.

(2) அதிகமான விளைச்சலைப் பெறும் நோக்கத்துடன் மிகச் சிக்கனமான முறையில் வேண்டிய அளவுக்குக் கூடுதலான உரங்களைப் பயன்படுத்துதல்.

(3) மண்ணில் அமில காரணம் போன்ற தீங்கு பயக்கக் கூடிய தன்மை உள்ளனவா எனக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கான தகுந்த வழிகளைக் கூறுதல்.

(4) கிராம அளவில் நிலவள தரைப்படம் வரைதல்.

---

* **172–174**-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.